RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s198

OPEN ACCESS

# அறஇலக்கியங்கள் மீதான விளிம்புநிலைப் பார்வை - பொ. வேல்சாமி, ராஜ்கௌதமன் ஓர் ஒப்பீடு

ஞா. தியாகராஜன் [அ, *]

[அ] தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை- 625009, தமிழ்நாடு, இந்தியா

# Marginal View on Moral literature - P. Velsamy and Raj Gauthaman

N. Thiyagarajan [a, *]

[a] Department of Tamil, Thiagarajar College, Madurai-625009, Tamil Nadu, India

* Corresponding Author: thiyagarajan852@gmail.com

Received: 28-07-2022
Revised: 24-09-2022
Accepted: 11-10-2022
Published: 10-12-2022

**ABSTRACT**

This article focuses on the marginal view on 'Moral Literature' which is called Sangam Maruviya literature. The development of critical analysis after the nineties became the starting point for re-meaning all literature. Virtues are taught to people in their day to day life. Even if there is no education provided for a person, some kind of virtues work spontaneously in his/her thoughts. In more theoretical terms, each individual body functions as a collection of virtues. In this case, there are 18 books in Moral Literature. Virtues are being taught in educational institutions that civilized the society and studies are also being conducted to re-read them. There is not enough attention and interest towards its field of study and most of the studies is conducted with the same ideas and it feels like a kind of stagnation. In order to change them and to view literature in a new way it is necessary to carry out studies by following the research ideas undertaken with efforts. Considering this, the article examines Velsamy and Raj gauthaman's view of virtues in a comparative way.

**Keywords:** Moral Literature, Velsamy, Raj Gauthaman, Marginal People, Virtues

## முன்னுரை

தொண்ணூறுகளில் தமிழில் தோன்றிய தலித்திய, பெண்ணியக் கோட்பாடுகள் அதுவரை பயின்றுவந்த சிந்தனை மரபுகளை மறுவாசிப்பு செய்வதற்கான அவசியத்தை உணர்த்தின. பஞ்சாங்கம், ராஜ்கௌதமன் ஆகியோர் கல்விப்புல வழியாக இத்தகைய ஆய்வுகளை முன்னெடுத்தனர். அந்தவகையில் இலக்கிய வரலாற்றின் மீதும் புதிய ஒளிகொண்டு மாற்றுச்சிந்தனைகள் முன்வைக்கப்பட்டன. கைலாசபதி, கார்த்திகேசு சிவத்தம்பி ஆகியோர் சங்கப் பனுவல்கள் மீது நிகழ்த்திய மார்க்சிய பார்வையிலான ஆய்வுகளிலிருந்து புதிய திறனாய்வுகள் மேலும் பல திறப்புகளைக் கண்டறிந்து கூறின. அவற்றில் ஒன்றுதான் இலக்கியங்கள் மீதான 'விளிம்புநிலை வாசிப்பு'. பொதுவாக மனித சிந்தனைகளை ஆதிக்கக்கருத்தியலே வடிவமைக்கின்றன என்ற அதிர்ச்சிகரமான உண்மையை இவ்வாய்வுகள் போதிய தரவுகளுடனும் நவீன கோட்பாடுகளுடனும் நிரூபித்தன. அத்தகைய ஆய்வு முயற்சியை மேற்கொண்ட ராஜ்கௌதமன் மற்றும் பொ. வேல்சாமி இருவரின் பார்வைகளையும் ஒப்பீட்டு அறங்கள் குறித்த நவீன பார்வையினை மையப்படுத்துவது இவ்வாய்வின் நோக்கமாகும்.

## நிலவுடைமை என்னும் கருத்தியல் பார்வை

குறிப்பிட்ட காலம்வரை கல்வியாளர்கள் மற்றும் ஆய்வாளர்களால் தமிழரின் நாகரிகம், பண்பாடு, சமூக உருவாக்கம் குறித்து நிகழ்த்தப்பட்ட ஆய்வுகளை மார்க்சிய பார்வையிலான ஆய்வுகள் முற்றிலும் மாற்றியமைத்தன. மன்னரின் பெருமையே ஒட்டுமொத்த சமூகத் திரளின் பெருமையாகப் போதிக்கப்பட்டு வந்த நிலையில் கைலாசபதி 'தமிழில் வீரயுகப் பாடல்கள்' என்ற தனது ஆய்வின் மூலம் சங்க இலக்கியங்களை வாய்மொழி இலக்கியங்களாகக் காணும் ஒரு ஆய்வுப்பார்வையை முன்வைத்தார். அதன் தொடர்ச்சியாக நிகழ்த்தப்பட்ட ஆய்வுகளின் வழியாகத் தமிழ்ச் சமூகத்தில் 'நிலவுடைமை' எவ்வாறு தோற்றம்கொண்டது எவ்வாறு வேர்பிடித்தது என்பவை நுணுகி ஆராயப்பட்டுச் சங்க இலக்கியங்கள் மீதான அறிவார்த்தமான பார்வை செலுத்தப்பட்டது. இதன்மூலம் 'வேந்தர்' என்ற அரச நாகரிகம், பண்பாடு என்பது அதிகாரம் சார்ந்ததாகவும், அவையல்லாத திணைக்குடி வாழ்நிலையைச் சாதாரண மக்கள் சார்ந்த பண்பாடாகவும் பிரித்து இனங்காணப்பட்டது. எழுபது, எண்பதுகளில் நிகழ்ந்த இத்தகைய ஆய்வின் வளர்ச்சியாகப் 'நிலவுடைமை' என்பது எவ்வாறு தமிழக உயர்சாதியினரின் வளர்ச்சியாகத் தமிழகத்தில் கட்டமைக்கப்பட்டது என்பதையும், ராஜ்கௌதமன் அறக்கோட்பாடுகள் எவ்வாறு மனிதனின் புலன்கள் மீது ஆளுமை செலுத்தி அவனை அதிகாரத்தை ஏற்பவனாக மாற்றியது என்பதையும் ஆராய்ந்துள்ளனர். சமணப் பௌத்த அறங்கள் குறித்த இவர்களின் ஆய்வு தர்க்கப்பூர்வமானதாகவும் நடைமுறைக்கு மிகவும் இயைந்து போவதாகவும் இருப்பதைத் தமிழ்ச்சமூகத்தைக் கூர்ந்து அவதானிப்பவர்கள் உணர்ந்துகொள்ளலாம் (Rajgowthaman, 2018). எனவே இவற்றைச் சமண, பௌத்த அறங்கள் குறித்த சமகாலப் பார்வையெனக் கொள்ளலாம்.

## பக்தி இலக்கியங்களுக்கான தோற்றுவாய்

சமணப் பௌத்த மதங்களின் வளர்ச்சியைச் சமன்செய்வதற்கு மாற்றாகவே பக்தி இலக்கியம் முழு வீறுடன் எழுந்ததென்பது தமிழ் ஆய்வுப்புலத்தில் மறுக்க முடியாத முடிபாகும். எனினும் பக்தி இலக்கியம் எதன் பொருட்டு இத்தகைய எதிர்நிலையைத் தேர்ந்தெடுத்தது என்று கூறவரும் தமிழறிஞர்கள் பலரும் அவை தமிழ் மண்ணில் தோன்றாத அந்நிய சமயங்கள் என்ற கருத்தையே உரத்த குரலில் எழுதி வருகின்றனர். ஆனால் வரலாற்றில் மாற்றுப்பார்வையின் தேவையை உணர்த்தும் பின்வருமாறு கூறுகிறார் (Velsamy, 2018).

"நிலவுடைமை என்பதைத் தனிப்பட்ட நபர்களின் சொத்தாகக் காட்டாமல் சைவ. வைணவக் கோவில்களில் சொத்துக்களாக மாற்றிவிட்டனர். பொதுப்பார்வையில் இறைவனுக்கு உரிமையாக்கப்பட்டவை அனைத்தும் புனிதத்தன்மை உடையவையாக மக்கள் கருதும் நிலை உருவானது. ஆனால் கோவில் சார்ந்த இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களிலிருந்து வந்த வருவாய் அனைத்தையும் பார்ப்பன மற்றும் உயர்சாதி கூட்டாளிகள்தான் முழுமையாக அனுபவித்து வந்துள்ளனர்" (Velsamy, 2018).

மேய்ச்சல் சமூகத்திலிருந்து வேளாண் சமூகத்திற்கு மாறிய நிலையில் பொருட்கள் மீது சுய உரிமை கொண்டாடும் 'உடைமை' என்கிற மனோபாவம் வளர்கிறது. மருதத்திணையில் தோன்றும் இத்தகைய நிலவுடைமையே 'வேந்தர்' எழுச்சிக்கான சூழலையும் தோற்றுவிக்கின்றன. அவ்வாறு வளர்ந்த 'வேந்தர்' அரசமைப்பினை தனது லாபத்திற்காகப் பயன்படுத்திக்கொண்ட ஆரியர்கள் பின்னால் சமண, பௌத்த சமயங்கள் போதித்த 'அறிவுடைமை' போன்ற கல்வி சார்ந்த கருத்தியலால் தங்களது வேதப் பண்பாட்டை வளர்க்க முடியாமல் திணறினர். வரலாற்றின் இந்தக் காலகட்டத்தை 'இருண்ட காலம்' என்று பல இலக்கிய வரலாற்று ஆசிரியர்களும் இன்றும் எழுதியும் பேசியும் வருகின்றனர். இதுகுறித்துப் பின்வரும் கேள்வியை எழுப்புகிறார் (Rajgowthaman, 2018).

"களப்பிரர்கள் என்கிற பண்பாடில்லாத அதாவது தமிழர் அல்லாத இனத்தாரால் தமிழ்ப்பண்பாட்டுச் சீரழிக்கப்பட்டது இதைச் சரிப்படுத்த தோன்றியவையே நீதிநூல்கள் என்று குழந்தைத்தனமாகச் சில தமிழறிஞர்கள் கூறியுள்ளார்கள் அப்படியென்றால் திருக்குறள், நாலடியார் முதலான நீதிநூல்கள் தோன்றிய காலத்துக்கு முந்தைய ஐந்நூறு ஆண்டுகளில் புலவர்களால்

பாடப்பட்ட சங்கப் பாடல்களில் அறங்கள் மிகவும் காத்திரமாகச் சொல்லப்பட்டதற்கும் இதே காரணத்தைச் சொல்லப் போகிறார்களா?" (Rajgowthaman, 2018).

ஆக நீதிநூல்கள் தோன்றியதற்குக் களப்பிரர்களின் பண்பாடற்ற படையெடுப்புதான் காரணம் என்ற வரலாற்று ஆசிரியர்களின் கூற்று இங்கு மறுதளிக்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து பொ. வேல்சாமியும், ராஜ்கௌதமனும் அறஇலக்கியங்கள் மீதான தங்களின் பார்வைகளில் முரண்படும் இடங்களைப் பின்வருமாறு காணலாம்.

## பொ. வேல்சாமி பார்வை

நிலவுடைமை என்கிற கருத்தை ஏற்றுக்கொள்ளும், ராஜ்கௌதமன் இருவருமே அறஇலக்கியங்கள் குறித்த தங்கள் பார்வையில் எதிரெதிர் புள்ளிகளாக உள்ளனர். இருவரின் பார்வையும் விளிம்புநிலை சார்ந்தது எனினும் அவர்கள் அறஇலக்கியங்கள் மன்னர்களின் அறமற்ற செயலை அதாவது திணைக்குடிகளாக வாழ்ந்த பழங்குடியினரான தமிழர்கள் வலுக்கட்டாயமாக 'வேந்தர்' பண்பாட்டுடன் இணைக்கப்பட்டதற்கு மறுதலையாக மக்கள் சார்பில் தோன்றியவையே 'அறஇலக்கியங்கள்' என்ற பார்வையை முன்வைக்கிறார். மக்களுக்கான நல்லுரையாகத் திருக்குறள் கூறும் கல்வியுடைமை, அறிவுடைமை என்கிற இயல் பகுப்புகளைக் காணும்போது கருத்திற்கு வலுசேர்ப்பதாகவே அமைந்துள்ளது. நாலடியாரும் இதே அமைப்பில் காணப்படும் நிலையில் மன்னரின் படையெடுப்புகளுக்கும், வன்முறைக்கும் எதிராக மக்களைக் கருத்தியலால் பண்படுத்திய பல அம்சங்கள் அறஇலக்கியங்களில் காணக் கிடைப்பதைப் பார்க்கிறோம். அறஇலக்கியங்கள் குறித்த கருத்துப் பின்வருமாறு அமைகிறது (Velsamy, 2018).

"இவற்றை நீதி நூல்கள் என்பது பொருந்தாது. நீதி என்பது அச்சுறுத்திப் பணிய வைப்பது. அதிகாரம்தான் நீதியை வழங்கும். அறம் என்பது மனித மனத்தை இளமை முதற்கொண்டு பண்படுத்தி - அதன் விளைவாக மனிதனை உருவாக்குவது" (Velsamy, 2018).

சங்க மருவிய இலக்கியங்களை 'நீதி இலக்கியங்கள்' என்பதைவிட அறஇலக்கியங்கள் என்பதே பொருந்துமெனக் கூறுகிறார். இதன் தொடர்ச்சியாக 'அறம்' என்பதன் வரையறைகளைக் கோட்பாட்டு நிலையில் அணுகும் ராஜ்கௌதமன் பார்வையினைக் காணலாம்.

## ராஜ்கௌதமன் பார்வை

அறங்களை 'மறுபொருள்கோடல்' செய்வதாக அமையும் ராஜ்கௌதமனின் ஆய்வானது அறத்தினைப் பின்வருமாறு உரைக்கிறது.

"அறங்கள் வெற்று விதிகள் அல்ல. இவை மேலாதிக்கச் சமூக ஒழுங்கை அல்லது நடப்பில் நிலவுகின்ற ஆதிக்க - ஆட்பட்ட உறவுகளைச் சாசுவதமாக்குகின்றன. ஒரு சாராரின் நலனே ஒட்டுமொத்தச் சமூக நலன் என்று அறங்கள் நியாயப்படுத்தவல்லவை" (Rajgowthaman, 2018).

அறங்கள் என்பவையே நிலவுடைமையின் அதிகாரத்தை வலுப்படுத்த தோன்றிய கருத்தியலாக முன்வைக்கிறார் ராஜ்கௌதமன். அதிகாரம் குறித்த பூக்கோவின் கோட்பாடு வழியிலான ஆய்வாக அமைகிறது ராஜ்கௌதமன் அவர்களின் பார்வை. நன்மை× தீமை, வாய்மை×பொய்மை போன்ற இருமைகளின் வழியாக அறங்கள் என்பவை கட்டப்பட்டன. சமூகத்தைப் பண்படுத்த எழுந்தவையே அறஇலக்கியங்கள் என்ற கூற்றை இத்தகைய கோட்பாட்டு முறையிலான ஆய்வு மறுதளிக்கிறது. அறங்கள் மீது கட்டப்பட்ட புனிதங்களே அவற்றை விமர்சனத்திற்கு அப்பால் நிறுத்தியது எனலாம். அறங்கள் என்பது தனிப்பட்ட மனிதனினை பண்படுத்துவதற்கான கல்வி என்னும் வேல்சாமியின் கருத்தை ராஜ்கௌதமனின் ஆய்வானது மறுக்கிறது (Rajgowthaman, 2018). அறங்களைக் கூற அதற்குப் பின்னால் அதிகார விழைவொன்று செயல்பட்டிருப்பதைத் தெளிவாக உணர முடிகிறது.

## நாலடியார் கூறும் அறங்கள்

அறநூல்களில் சமண முனிவர்களால் இயற்றப்பட்ட நாலடியாரை மேற்கூறிய முறைகளில் காணும்போது அறங்கள் குறித்தான உண்மை தெளிவுறுகிறது. சங்க இலக்கியங்கள் திணைநிலைக் குடிகளாகவே தமிழ் நிலப்பரப்புக்குள் வாழ்ந்த மக்களை அடையாளம் காட்டுகிறது. மக்களின் பெயர்களும் திணை அமைப்பு சார்ந்தே காணப்படுகிறது. அவற்றிலிருந்து ஐந்நூறு ஆண்டுகள் தள்ளியெழுந்த அறஇலக்கியமான நாலடியாரில் 'குடிப்பிறப்பு' என்ற தனி அதிகாரமொன்றே அமைக்கப்பட்டு உயர்குடிப் பிறந்தவர்களின் சிறப்புகள் கூறப்படுகின்றன. இவையும் சாதி குறித்த பார்வையாக இல்லாவிட்டாலும், ஈகை செய்யாத, சான்றோரை சேராதவர்களை இழிப் பிறப்பாளர்கள் என்று கூறுகிறது. ஆகத் திணைக்குடிகளாகவும், வேட்டைச் சமூகமாகவும் வாழ்ந்த காலத்திலிருந்து விலகி மனிதருள் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பகுப்பு நுழைந்ததை நாலடியாரின் 'குடிப்பிறப்பு' என்னும் அதிகாரம் கூறுகிறது. ஈகை என்பதும் போற்றுதலுக்குரிய செயலாய் அமைக்கப்படுவதின் மூலம் இரப்போரின் வறுமை இழிவானதாகப் பார்க்கப்படும் மற்றொரு விளைவு இச்செயலில் நடைபெறுகிறது. மேலும் ஒழுக்கம், சான்றாண்மை என்றெல்லாம் கையாளப்படும் சொற்களுக்கான சரியான வரையறைகள் மூல நூலில் தெளிவுபட உரைக்கப்படவில்லை. பின்னால் உரை எழுதியவர்கள் அவரவரின் உள்ளச் சார்பை அதில் ஏற்றி உரை வரைந்துள்ளனரேயன்றி அதன் விளக்கத்திலேயே மூலநூலைப் புரிந்துகொள்வது இடர்ப்பாடாகவே அமைகிறது (Balasundram pillai, 2007).

## அறஇலக்கியங்கள் நிலவுடைமை அதிகாரத்திற்கு எதிரானதா?

மேற்கூறிய இருவரின் பார்வையில் பார்க்கும் போது அவர்களின் பார்வை சரியானதாகவும் ஆய்வு ரீதியாகவும் அமைகிறது (Rajgowthaman, 2018). குறிப்பிடுவது போன்று நிலவுடைமை அதிகாரத்திற்கெதிராகச் சமண-பௌத்த மதங்கள் திணைக்குடிகளிடம் வேரூன்றி அவர்களை அரச அதிகாரத்திற்கெதிராகக் கல்வியுடையவர்களாக மாற்றியது என்பதற்கான சான்றுகளை அறஇலக்கியங்களில் அரிதாகவே காணமுடிகிறது (Velsamy, 2018). 'பிறன்மனை நயவாமை' போன்ற அறங்கள் மூலம் அவை மண்ணாசைக் கொண்ட மன்னர்களுக்கெதிராக அறம்போதித்தாகக் கொண்டாலும் பல அறங்களும் அரச குடையின் கீழ் மக்களைக் கலகம் செய்யாமல் வாழ வலியுறுத்துவதாகவே அமைகின்றன. எனவே நிலவுடைமைக்கான முழுக்கருத்தியலாகதான் அறங்கள் செயல்பட்டுள்ளன என்பதை இவ்வாய்வின் வழி அறிய முடிகிறது.

## விளிம்புநிலைப் பார்வை

விளிம்புநிலைப் பார்வை என்பது சமூகத்தை அதன் ஒடுக்கப்பட்டோரின் பார்வையிலிருந்து அணுகுவதாகும். எனவேதான் அதிகாரம் குறித்து விரிவாக ஆராய்ந்த பூக்கோ 'அறிவே அதிகாரத்தின் முதல்படி' என்று அதனை வரையறை செய்கிறார். பல நூறு ஆண்டுகளாகச் சாதிய படிநிலையால் பிளவுண்டிருக்கும் இந்தியா போன்ற சமநிலையற்ற சமூகத்திற்கு இத்தகைய விளிம்புநிலைப் பார்வை அணுகுமுறையானது தற்காலத் தேவையாகவும் எதிர்காலத்திற்கான அவசியமாகவும் உள்ளது. எனவே அதனை விளக்கொளியாகக் கொண்டு ஒவ்வொன்றையும் அதன் புனிதங்களிலிருந்து விலகி நின்று பொருள்கொள்ள வேண்டிய தேவையுமுள்ளது (Sivathamby, 2017). அதன் சிறுமுயற்சியாகவே இவ்வாய்வுக்கட்டுரை அமைந்துள்ளது.

## முடிவுரை

சங்க இலக்கியங்கள் மீது நடைபெற்றுள்ள 'மார்க்சிய' பார்வையிலான ஆய்வுகள் எவ்வாறு கோட்பாட்டு வழியிலான ஆய்வுகளுக்கு வழிகோலின என்பதிலிருந்து 'நிலவுடைமை' என்னும் மையப்புள்ளியிலிருந்து இலக்கியங்களை ஆய்வதற்கான அவசியத்தை உணர்த்தியதுடன் அவ்வகையில் ஆராயப்பட்டுள்ள இரு ஆய்வாளர்களின் 'விளிம்புநிலை' பார்வையினை எடுத்தியம்பி அவற்றின்

சரித்தன்மையும் இவ்வாய்வு கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது. அறங்கள் வெறும் அறிவுரைகள் அல்ல என்பதையும் அதன் பின்னால் அதற்கான அரசியல் நிர்பந்தமொன்று செயல்பட்டிருப்பதையும், அது புலவர்கள் மூலமாக நூல்களாக இயற்றப்பட்டு வளர்க்கப்பட்டுள்ளது என்பதும் இவ்வாய்வின் வழியாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. மேற்கொண்டு அறநூல்கள் ஒவ்வொன்றையும் தனிதனியே இப்பார்வைகளுடன் ஒத்திசைவாக அணுகி ஆராய்வதற்கான மேலாய்வுக் களங்களும் இதன்மூலம் விரிந்துள்ளன என்பதையும் இங்குச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

## References

Balasundram pillai, (2007) Naladiyar, Saiva sidhndha noorpathippu kazhagam, Tirunelveli, India.

Rajgowthaman, (2018) Tamil samoogathil aramum attralum, New Century Book House, Chennai, India.

Sivathamby, K. (2017) Pandiath tamil samooga varalatru purithalai nooki, New Century Book House, Chennai, India.

Velsamy, P. (2018) Kovil Nilaiyam Sadhi, Kalachuvadu Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License